**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 விசுவாவசு வருடம் ஆடித் திங்கள் 28–ம் நாள்
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள் புதன்கிழமை

இடைநிலை மனு எண்.3/2024
இன்
அசல் வழக்கு எண்.54/2023
(CNR.No.TNTR21-000058-2023)

...

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், J.J. ரவி நகர், துர்க்கை அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் நரசிம்மன் மனைவி சுமார் 51 வயதுள்ள C.N. ஆறுமுகம்
2. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், J.J. ரவி நகர், துர்க்கை அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் ஆறுமுகம் மனைவி சுமார் 48 வயதுள்ள A. அன்னபூரணி
3. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், J.J. ரவி நகர், துர்க்கை அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் ஆறுமுகம் மகன் சுமார் 25 வயதுள்ள A. லோகேஷ் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், பொன்பாடி கிராமத்தில் வசிக்கும் K. சுப்பிரமணி மனைவி சுமார் 59 வயதுள்ள S. தனம்மாள்

... எதிர்மனுதாரர்/வாதி

அசல் வழக்கை நிராகரித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 (a) & (d)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நாள்:20.09.2024.

இம்மனுவிற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.20/–செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 24.07.2025 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. வெங்கடேசன், N. பாலாஜி, P. பிச்சைமணி, ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.N. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## **உத்தரவாணை**

1. இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

## **செலவுத் தொகைப் பட்டியல்**

இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள் என் கையழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற இலட்சினைப் பதிப்பிக்கப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.08.22 14:08:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.